இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 19 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 11 – திங்கள்கிழமை 28 ஆகஸ்ட் 2023 – மதுரை 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 19: Thiruvalluvar Year - 2054 - Aavani 11 - Monday 28 August 2023 - Madurai 12+8 Pages ₹ 5.00

## ஊழலைப் பற்றி பேச பா.ஜ.க.வுக்கு அருகதை உண்டா? மோடி ஆட்சியின் மெகா ஊழல்

# ரூ.7,50,000 00 00 000!

## சி.ஏ.ஜி.யின் அதிர வைக்கும் அறிக்கையை சுட்டிக்காட்டி

## நாகை எம்.செல்வராஜ் எம்.பி. இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் குற்றச்சாட்டு!

சென்னை, ஆக. 28 -

**மோடி ஆட்சியில் ரூ.7,50,000 00 00 000 (ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் கோடி ரூபாய்) மெகா ஊழல் நடைபெற்றுள்ளது. எனவே, ஊழலைப் பற்றி பேச பா.ஜ.க.வுக்கு அருகதை உண்டா? என்று சி.ஏ.ஜி.யின் அதிர வைக்கும் அறிக்கையை சுட்டிக்காட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாகை எம்.செல்வராஜ் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் குற்றம் சாட்டியுள்ளார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.08.2023) நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ் மகள் செல்வப்பிரியா விக்னேஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், கே.மாரிமுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள்.கோ.பழனிச்சாமி, சிவபுண்ணியம், திருமதி பத்மாவதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (27.08.2023) திருவாரூர் மாவட்டம், பவித்திரமாணிக்கத்தில் நடைபெற்ற நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் இல்லத் திருமண விழாவுக்குத் தலைமையேற்று ஆற்றிய உரை வருமாறு:-

இங்கு நன்றி உரை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் அவர்களும், நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் அன்புக்குரிய முத்தரசன் அவர்களும், இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு நான் வந்திருப்பதை சுட்டிக்காட்டி, நாங்கள் கேட்டதும் தேதியைத் தந்து எந்தவித மறுப்பேதும் சொல்லாமல் வந்திருக்கிறேன் என்று பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள்.

நான் தட்டாமல் இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு வந்ததற்கு காரணம், மண்ணின் மைந்தர் என்ற காரணம் ஒரு பக்கம் இருந்தாலும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்களைப் பொறுத்தவரைக்கும், அவர் அன்போடு - பண்போடு - பாசத்தோடு என்னிடத்தில் மட்டுமல்ல, எல்லோரிடத்திலும் பழகக்கூடியவர்.

**நாகை மாவட்டத்திற்கு ஒளியாகவும் மதியாகவும் இருக்கிறார் செல்வராஜ்!**

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆனதற்குப் பிறகு, பல்வேறு மாவட்டங்களுக்கு - பல்வேறு பகுதிகளுக்கு - அரசு நிகழ்ச்சிகளுக்கு - கட்சி நிகழ்ச்சிகளுக்கு - பொது நிகழ்ச்சிகளுக்கு செல்கின்ற நேரத்தில் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு திருமண நிகழ்ச்சி இருந்தால் அதில் நான் பங்கேற்பது உண்டு.

ஆனால் இந்த நிகழ்ச்சியை பொறுத்த வரைக்கும் நானே மனமுவந்து இந்தத் தேதியை அவரிடத்தில் வழங்கி இந்தத் தேதியைப் பயன்படுத்திப் பல நிகழ்ச்சிகளுக்கு ஒப்புதல் தந்து மூன்று நாட்களாக இந்த டெல்டா மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். ஆனால் நடந்து முடிந்திருக்கும் இந்தத் திருமண நிகழ்ச்சியில் மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்ந்து நான் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

நாகை மாவட்டத்திற்கு ஒளியாகவும், மதியாகவும் இருக்கிறார் நம்முடைய செல்வராஜ் அவர்கள். 1975இல் இருந்து தன்னை இந்த இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைத்துக் கொண்டு ஏறக்குறைய 48 ஆண்டுகாலமாக இந்த இயக்கத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பல பொறுப்புகளில் பணியாற்றியவர்!**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர், நாகை, திருவாரூர் மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளர், நாகை மாவட்டக் கழகத்தின் செயலாளர், மாநில நிர்வாகக் குழுவின் உறுப்பினர், தேசிய குழுவின் உறுப்பினர் - இவ்வாறு பல்வேறு பொறுப்புகளில் இருந்து இயக்கப் பணி - பொதுப் பணி - மக்கள் பணி ஆற்றியிருப்பவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள்.

தற்போது கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினராக, AITUC-யின் மாநிலத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் சீரான பொருளாதார வளர்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஆக. 28 -

**கொரோனாவுக்கு பிந்தைய காலத்தில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையான விலைவாசி அடிப்படையில் 8 சதவீதமாக இருந்து வருவதாகவும், ‘திராவிட மாடல்’ ஆட்சியில் சீரான பொருளாதார வளர்ச்சியை கண்டுவருவதாகவும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளதை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார்.**



தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் வழிகாட்டுதலுடன், மாநில பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை சார்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்த நடவடிக்கையின்போது சேகரிக்கப்பட்ட தரவுகளின் ஆய்வு முடிவுகள் வெளியாகி உள்ளன. இதன்படி, 2011–2012 நிதியாண்டு முதல் கொரோனாவுக்கு முந்தைய காலம் வரை மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்ற இறக்கங்களுடன் 5 புள்ளி 80 சதவீதமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ள ஆய்வு முறைகளின்படி மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறித்த விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது வெளியாகி உள்ள தகவல்களின்படி, நிலையான விலைகளின் அடிப்படையில், 2022–2023 நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 14 லட்சத்து 53 ஆயிரத்து 321 கோடி ரூபாயாகும், வளர்ச்சி விகிதத்தில் இது 8 புள்ளி 19 சதவீதமாகும்.

தற்போதைய விலைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 23 லட்சத்து 64 ஆயிரத்து 514 கோடி ரூபாயாகும், வளர்ச்சி விகிதத்தில் இது 14 புள்ளி 16 சதவீதமாகும். மேலும், 2022 – 2023ல் நிலையான விலைகளின் அடிப்படையில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7புள்ளி24 சதவீதம் என்றும், தற்போதைய விலைகளின் அடிப்படையில் இது 14 புள்ளி 16 சதவீதம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



'Tamil Nadu's economic growth increased to 8% at constant prices in 2021-22, 2022-23'

2021– 2022 ஆம் ஆண்டில், தற்போதைய விலையில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மகாராஷ்டிரா முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன. 2022 –2023 நிதியாண்டின் பொருளாதார நிலை குறித்து பல மாநிலங்களின் ஆய்வறிக்கைகள் வெளியாகாததால், பிறமாநிலங்களுடன தமிழ்நாட்டை ஒப்பிடும் வகையிலான விவரங்கள் தயாரிக்கப்படவில்லை என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2021–2022 மற்றும் 2022–2023ல் அகில இந்திய அளவிலான பணவீக்கம் 9புள்ளி 31சதவீதம் மற்றும் 8 புள்ளி 82 சதவீதமாக இருந்த நிலையில், தமிழ்நாட்டின் பணவீக்க குறியீடு 2021–2022ல் 7புள்ளி 92 சதவீதமாகவும், 2022–2023ல் 5 புள்ளி 97 சதவீதமாகவும் இருந்தது என்றும் இந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ‘இந்து’ ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது..

இதற்கிடையே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:–

**பெரும் பெருமிதத்துடன் தேசிய சராசரியை விஞ்சிய வளர்ச்சி! நமது ‘திராவிட மாடல்’ அரசு தமிழ்நாட்டைப் புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்கிறது. நமது அயராத முயற்சிகள் 2021-2022 மற்றும் 2022-2023 ஆண்டுகளில் 8% எனும் சிறப்பான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை உறுதிசெய்து, இந்தியப் பொருளாதாரத்தின் ஆற்றல்மிகு மையமாகத் தமிழ்நாட்டை நிலைநிறுத்தியுள்ளன.**

**நடப்பு விலையில் 2022-2023 ஆண்டுக்கான நமது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ( GSDP) 14,53,321 கோடி ரூபாயாக உயர்ந்து, 2030க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்னும் நமது இலக்கை நோக்கிய பயணத்துக்கு அடித்தளம் அமைத்துள்ளது.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.